DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.55 /2023**

**prosecution witness: Pw -1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1, A2 absent, petition filed**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரலோக பெரியநாயகி | ஜாதி | : |
| க/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**26.09.2023**

முதல் விசாரணை:-

1. நான் பாம்பன் பிரான்சிஸ் நகரில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன்.எதிரிகளை தெரியும். கடந்த 23.04.2022-ம் தேதி மாலை 5 மணியளவில் நான் என் பண்ணை வீட்டில் இருந்த போது பொது கிணறில் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக பிரச்சனை வந்தது.எனது மாமனார் எனது கணவரை தாயோழி வெளி போ என்று அசிங்கமாக பேசினார். உடனே 1 வது எதிரி லோயோலா அருவாளை எடுத்து வந்து எனது கணவரின் இடது தோள்பட்டையில் வெட்டி இரத்தக்கயாம் ஏற்படுத்தினார்.

2. நான் உடனே சென்று ஏன் என் கணவரை வெட்டினீர்கள் என்று கேட்டதற்கு நான் கற்பமாக இருந்ததை கூட பாராமல் என்னை வயிற்றில் எதிரிகள் இருவரும் மிதித்தனர். சம்பவம் நடைபெறும் போது எனது மாமியார், மைத்துனர் இருந்தார்கள். அதன்பிறகு நடந்த சம்பவத்தை தொலைபேசி மூலம் எனது அம்மாவிற்கு தெரிவித்தேன். அதன்பிறகு காயம்பட்ட என் கணவரை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். அங்கு வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டார்.

3. அதன்பிறகு நான் பாம்பன் காவல்நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள

கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது நீதிமன்றத்தில் சொல்லியதை தான் புகார் மனுவிலும், போலீசார் விசாரையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் எங்களது பண்ணை வீட்டிற்குள் வைத்து நடந்தது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் என் கணவரை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு மாலை 6 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

2. புகார் மனுவை நான் தான் எழுதினேன். என் கணவர் 1வது எதிரியை உருட்டு கட்டையை வைத்து அடித்து காயத்தை ஏற்படுத்தியதற்கு பாம்பன் காவல் நிலையத்தில் அவர் மீது புகார் கொடுக்கப்பட்டு குற்ற எண்.87/23 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது கணவரை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றது என்றால் எனது அம்மா அழைத்து சென்றார். அருவாளை வைத்து வெட்டி இரத்தக்காயம் ஏற்பட்டால் மருத்துவமனையில் உள்நோயாளியாகத்தான் சிகிச்சை அளிப்பார்கள் என்றால் சரிதான்.

3. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, எனது கணவர் தான் 1வது எதிரியை உருட்டு கட்டையால் அடித்துவிட்டதால் தன் மீது வழக்கு பதிவு செய்துவிடுவார்கள் என்று பயந்து இந்த பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு உண்மையில் காயம் ஏற்பட்டிருந்தால் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருப்பார் காயம் இல்லாததால் தான் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no: CC.No.55 /2023**
**prosecution witness: Pw -2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1, A2 absent, petition filed**

வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜான் பிரிட்டோ | ஜாதி | : |
| க/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**26.09.2023**
முதல் விசாரணை:-

1. நான் பாம்பன் பிரான்சிஸ் நகரில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 என் மகள் ஆவார்.சுமார் 1 வருடத்திற்கு முன்பு நான் என் மகள் வீட்டிற்கு சென்றிருந்தேன்.அப்போது அங்கு எனது மகளுடன் அவரது மாமனார் ஜெயகுமார், மாமியார் மரியா, மைத்துனர் லோயோலா ஆகியோர் சண்டை போட்டார்கள். அந்த சண்டையில் 1 வது எதிரி லோயோலா அருவாளை வைத்து எனது மருமகனின் இடது தோள்பட்டையில் வெட்டிவிட்டார்.

2. உடனே அவர் மயக்கமானவுடன் அவரை ஆட்டோவில் ஏற்றி இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தேன். நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க எது மகள் பாம்பன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் வீட்டில் வைத்து என் மகளை தான் விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விபரத்தை தான் எனது மகள் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.